# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2074/45 - 2018 ජුනි මස 08 වැනි සිකුරාදා - 2018.06.08

*2074/45 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

*அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள, 2017.04.11 ஆந் திகதிய 2014/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள "அ" அட்டவணையில் 9 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்பு 2018.06.01 ஆந் திகதி முதல் செயற்படும் வண்ணம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**அட்டவணை "அ"**

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| 9. கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் கல்வி விடயத்தின் கீழ் வரக்கூடிய இணைந்த சேவையைச் சாராத இல. 06/2006 என்னும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் (இணைப்பு II) இல் பொருள்கோடப்பட்டுள்ள ஆரம்ப, இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள் | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | I. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் பதவி நீக்கமும் |
| | கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | I. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கு / ஆட்சேர்ப்புத் திட்டத்துக்கு அமைவாக நியமனம் மற்றும் பதவி உயர்வு<br>II. தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள்<br>III. அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான வருடாந்த இடமாற்றங்கள் உள்ளிட்ட சகல இடமாற்றங்களும்<br>IV. அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல. 3/2016 இன் பிரகாரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகள் தொடர்பாக நிவாரணங்கள் வழங்குதல் |


1A — PG 4071 - 08 (2018/06)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட 2017.04.11 ஆந் திகதிய 2014/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் ஏனைய விடயங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் வலுவிலிருக்கும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

எம். ஏ. பீ. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 1200/09, இராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, யூன் 06.

06-935

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.